RNI.NO: TNTAM/2011/39264

# நவ் இந்தியர் டைம்ஸ்

உள்ளூர் செய்திகள் நிறைந்த நாளிதழ்

Web : www.nowindiartimes.com

NOW INDIAR TIMES

E-Mail : nowindiartimes@gmail.com

## தேசியம் / மாநிலம்

19.5.2021



இலயோலா கல்லூரி கொரோனா நோய் தடுப்பு திட்டம் மூலமாக கோவிட் வீட்டு பராமரிப்பு மருத்துவ உபகரணங்கள், மருந்து பொருட்கள் தொகுப்பினை இலயோலா கல்லூரியின் புறச்சேவை மையம் சார்பாக சென்னையிலுள்ள பல்வேறு பகுதிகளிலிருந்து புறச்சேவை தன்னார்வலர்களுக்கு வழங்கப்பட்டது. இதன் மூலம் விரைவாக கொரோனா தொற்றை கண்டறிந்து சமூக பரவலை தடுக்கும் விதத்தில், கோவிட் நோய்த் தடுப்பு தொகுப்பினை இலயோலா கல்லூரி முதல்வர் அருட்தந்தை தாமஸ் அமிர்தம், செயலாளர் செல்வநாயகம், அதிபர் தந்தை பிரான்சிஸ் பி. சேவியர், இயக்குநர் லூயிஸ் ஆரோக்கியராஜ் மற்றும் புறச் சேவைத் துறை பேராசிரியர் ஆனந்த் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வழங்கினர்.